# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**மன்னா – 11 மே 2021 பிரதி – 2**



# ஆயர் மடல்



உயிர்த்தெழுந்து வாழ்வு தரும் கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது ஓர் வளர்ந்து வரும் வாழ்வு. சரீரம் மனித வாழ்வில் வளர்ச்சியடைவது போல ஆன்மீகம் நமது வாழ்வில் வளர்ச்சியடைவதும், முதிர்ச்சி பெறுவதும் மிக இன்றியமையாதது. எனவே தான் **“விசுவாசத்தில் உயர்வு”** என்னும் தலைப்பில் இம்மாத இதழ் வெளிவருகிறது.

கடினமான வாழ்க்கைப் பயணம் மேற்க்கொள்ளும் நாம் ஒவ்வொரு நாளும் விசுவாசத்தில் வளர முயற்சிப்பதும், ஜெபிப்பதும் நல்லது. கொடிய வியாதி, நில அதிர்வுகள், மருத்துவம் இன்மை, இழப்புகள், புதிய ஆளுகை அமைப்புகள், வறுமை, கடன்சுமை, சேமிப்பு இன்மை, எதிர்காலத்தைக் குறித்துக் கேள்விகள் இவை அனைத்தும் நம்முன் மலைபோல் நிற்பவை. ஆனால் நாம் விசுவாசத்தில் உயர்ந்து மலைமேல் ஏறினால் இவை அனைத்தும் நம் பாதங்களுக்கு கீழே. எனவே இறை ஆற்றல் பெற்று ஜெபத்தோடு வாழ்க்கைப் பயணம் தொடர்வோம்.

இந்திய தேசத்தின் இன்னல் மாற அதிகமாக பாரத்தோடு ஜெபிப்போம். இறையாளுகை இந்திய மண்ணில் மலரவேண்டும். அனைத்து மக்களும் காக்கப்படவேண்டும், மருத்துவ உதவிகள் கிடைக்கப்பெறவேண்டும். ஜெபித்துக்கொள்வோம்.

திருச்சபைகள் மீண்டும் பூட்டப்பட்ட நிலையில் நமது திருச்சபை ஐக்கியம் வலுப்பெறவும், நேரலை வழித்தொழுகையில் பங்குபெறும் இறைமக்கள் இறை சமூகத்தில் மன்றாட்டோடு பங்குபெறுவோம். சபை மக்கள் பூரண உடல்நலம் பெற மன்றாடுவோம்.

உழைப்பை மையப்படுத்தும் இம்மாதம் முழுதும் உழைக்க உடல் ஆற்றலையும், மனபலத்தையும், பயணப்பாதுகாப்பையும், நல் ஆலோசனைகளையும் நிறைவாய் பெற்றுக்கொள்ள கர்த்தர் தாமே அருள்புரிவாராக!

**அன்புடன் போதகர்,**


**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## விசுவாசத்தில் உயர்வு – "எல்லாமே பார்த்துக்கொள்வீர்"

விசுவாசக் குடும்பங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். விசுவாசம் என்பது கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வில் உயர்ந்து, வளர்ந்து வரும் ஒன்றாய் இருக்கவேண்டும்.

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11:1).




காணாதவைகளையும் கர்த்தருக்குள் விசுவாசித்து அதில் உயர்வு பெற்று, கர்த்தர் எல்லாமே பார்த்துக்கொள்வார் என்று நிச்சயித்து, அர்ப்பணித்து வாழ்வதுதான விசுவாச வாழ்வு.

இந்நிலையில் விசுவாசத்தின் தந்தையாம் ஆபிரகாம் விசுவாசத்தில் உயர்வு பெற்றதோடு நமக்கும் முன்மாதிரியானார்.

"ஆபிரகாம் அந்த இடத்துக்கு யோகோவாயீரே என்று பேரிட்டான். அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது" (ஆதியாகமம் 22:14).

இங்கிலாந்திலே 1904-ம் ஆண்டில் வால்டர் மார்ட்டின் என்னும் போதகர் ஒருவரின் மனைவி சிவிலா மார்ட்டின் அவர்கள் எழுதிய 'ஆண்டவர் உன்னைப் பார்த்துக்கொள்வார்' (God will take care of you) என்கிற பாடல் மிகவும் புகழ்பெற்றது. அந்த பாடலை அவர் எழுதியதன் பின்னணி மிகவும் அற்புதமானது.

ஒருநாள் வெளியூர் கூட்டமொன்றில் போதகர் செய்தி கொடுக்க வேண்டியதாயிருந்தது. திடீரென்று அவருடைய மனைவி சிவிலா நோய்வாய்ப்பட்டார். போதகர் மனைவியை வைத்தியர்களிடம் காட்டியபோது அவர்கள் அவர் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக கூறினர். கூட்டத்திற்கு செல்வதா அல்லது மனைவியைப் பார்த்துக்கொண்டு வீட்டில் இருப்பதா என்று மனக்குழப்பத்தோடு அவர் இருந்தபோது அவரது ஒன்பது வயது மகன் அவரிடம் அப்பா நீங்கள் தைரியமாக கூட்டத்திற்கு செல்லுங்கள். கர்த்தர் அம்மாவை கவனித்துக்கொள்வார் என்று கூறினான். இந்த வார்த்தை போதகர் வால்டர்

மார்ட்டினை மட்டுமல்ல வியாதி படுக்கையிலிருந்த அவரது மனைவியையும் பெலப்படுத்தியது. மனைவியிடம் விடைப்பெற்று அவர் கூட்டத்திற்கு பிரசங்கிக்கச் சென்றார்.

அவர் திரும்ப வந்தபோது அவரது மனைவி அற்புத சுகத்தைப் பெற்றிருந்தார்கள். அவரது மனைவி, மகன் சொன்ன வார்த்தைகளின் அடிப்படையில் இந்தப் பாடலை எழுதினார். போதகர் அந்தப் பாடலுக்கு இசையமைத்தார். அந்தப் பாடல் இன்றளவும் புகழ்பெற்று விளங்குகிறது.

## ஆபிரகாமும் விசுவாசமும்:-

ஒரு நாள் ஆண்டவர் ஆபிரகாமிடம், உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசக்குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப்போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனப்பலியாகப் பலியிடு (ஆதி. 22:2) என்று சொன்னபோது மனம் கலங்கினாலும், கர்த்தர் கேட்டுவிட்டார் அவருக்கு நான் எப்படி இல்லை என்று சொல்வது என்று தன் மனைவியிடம்கூட சொல்லாமல், தன் மகனை கூட்டிக்கொண்டு மோரியா மலைக்கு வேலைக்காரர்களுடன் கழுதைகளோடும் சென்றார்.

ஆபிரகாம் மலைக்கு மேலே செல்லும்போதுதான் விறகுகளையும் மற்றவற்றையும் சுமக்க வேலையாட்கள் வேண்டும். ஆனால் அவர்களை கீழேயே நிறுத்திவிட்டு, தன் மகனை மாத்திரம் கூட்டிக்கொண்டு மேலே போகும்போது, சிறிய ஈசாக்கு தன் தகப்பனிடம் இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம், என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்துக்கொள்வார் (ஆதி. 22:7-8) என்று விசுவாச வார்த்தைகளைப் பேசினார்.



ஆனால் மகனை அந்த பலிபீடத்தில் கட்டி, அவனை வெட்டுவதற்கு கையை ஓங்கும்போது, தேவன் அதை தடுத்து நிறுத்தி, பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தப்படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ

பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான். அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான் (ஆதி. 22:12-13).

**"எல்லாமே பார்த்துக்கொள்வீர்":-**

ஆபிரகாம் வருவதற்கு முன்பாகவே ஒரு ஆட்டுக்கடாவை அந்த இடத்தில் பலிக்காக வைத்திருந்த தேவன் எத்தனை பெரியவர்! அதனால்தான் ஆபிரகாம் அவருக்கு யேகோவாயீரே என்னும் அர்த்தம்கொள்ளும் கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்ற பெயரை வைத்தார். அல்லேலூயா! பிரியமானவர்களே! நான் இனி என்ன செய்யப்போகிறேன், என் எதிர்காலம் என்ன என்று திகைத்து தவித்துக் கொண்டிருக்கிறீர்களோ? நம் தேவனுக்கு யேகோவாயீரே என்ற பெயர் உண்டு. அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்.

நாம் கலங்கி நிற்க தேவையில்லை. அந்தந்த நேரம் வரும்போது அவர் அருமையாக காரியங்களை வாய்க்க செய்வார். நம் தேவைகளை, நம் பிரச்சனைகளை, நம் அங்கலாய்ப்புகளை தேவன் பார்த்துக்கொள்வார். அவர் பார்த்துக்கொள்ளும்போது, அவர் கவனித்துக்கொள்ளும்போது நாம் கவலைப்படவேண்டியது இல்லையல்லவா! எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளும் கர்த்தரிடம் நம் எதிர்காலங்களை, நம் எதிர்பார்ப்புகளை அர்ப்பணிப்போம்.

கையில் ஒரு டார்ச் லைட்டுடன் இரவு வேளையில் கிராமத்தில் இல்லம் திரும்பிய சிறுவன் பயந்து நின்றுவிட்டான். ஏனென்றால் அவன் இல்லம் இருந்த திசை நோக்கி வெளிச்சம் காட்டியபோது இல்லம் தெரியவில்லை என்றான். பெரியவரோ நீ முதலில் உனக்கு முன் இருக்கும் பாதையில் உன் டார்ச்லைட்டை அடித்து ஒவ்வொரு அடியாக முன்வைத்துச்செல் என ஆலோசனை கூறினார்.

பலவேளைகளில் நாமும் இப்படித்தான் இருக்கிறோம். நமக்காக ஆண்டவர் வைத்திருக்கும் ஆசிகளை உணராது, பிறரது கேலிகளையும், விமர்சனங்களையும் பெரிதுப்படுத்திப் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போது ஆண்டவர் நமக்காக வைத்திருக்கும் ஆசிகள் நமக்கு தெரிவது இல்லை.

கர்த்தர் யாவையும் நமக்காய் செய்து முடிப்பார் என்னும் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடரவே அழைக்கிறார். வாழ்வில் நாம் சந்திக்கும் மனிதர்கள் அனைவரும் நம்மை வாழ்த்துவார்கள் என்பது உண்மையல்ல. விமர்சகர்களும் இருப்பர்,

விழத்தள்ளுகிறவர்களும் இருப்பர், விண்ணக வாழ்விற்கு உயர்த்துகிறவர்களும் இருப்பர்.

"கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
அவரை உன்னை ஆதரிப்பார்
நீதிமான் தள்ளாடவிடமாட்டார்
நித்தமும் காத்து நடத்திடுவார்"

இப்பாடல் வரிகளில் வரும் திருவசனத்தின்படி நம் வாழ்வை விசுவாசத்தில் உயர்த்துவோம். இறைநாமத்தை மகிமைப்படுத்துவோம்.

இறையாசி உங்களை வழிநடத்துவதாக.

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## கடைசி நிமிடத்தில் அற்புதம்



குளத்தில் குளித்துக்கொண்டிருந்த ஒருவன் திடீரென்று அதில் மூழ்கிவிட்டான். அனைவரும் பதற்றத்தோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவருக்கு மாத்திரமே நீச்சலடித்து, மூழ்கி கொண்டிருந்தவனை காப்பாற்ற முடியும். ஆனால் அவரோ அமைதியாக இருக்கிறார். தண்ணீரில் மூழ்கினவன் ஒரு தடவை, இரண்டு தடவை மூழ்கி, மூன்றாம் முறையாக மூழ்க ஆரம்பிக்கிறான். அப்போது நீச்சல் தெரிந்த இவர் குளத்திற்குள் பாய்ந்து சென்று நீரில் மூழ்கினவனை தூக்கிக் கொண்டு வந்து சேர்த்தார்.

ஏன் அவ்வளவு நேரமும் அமைதியாக இருந்துவிட்டு மூன்றாம் முறை மூழ்க ஆரம்பித்தவுடன் பாய்ந்து சென்று காப்பாற்றினார்? பதிலை நீங்களே யூகித்திருப்பீர்கள்! தண்ணீரில் மூழ்கினவனை உடனே நாம் காப்பாற்ற முயற்சித்தால் காப்பாற்றுபவனை மூழ்குகிறவன் கட்டிப்பிடித்து இருவரும் மூழ்க நேரிடும். மூழ்கினவன் தன் சொந்த பலனை எல்லாம் இழந்தால்தான் அவனைக் காப்பாற்றுவது எளிது. இதுபோலதான் நமது சில தேவையிலும் தேவன் உதவிசெய்ய கடைசி மணித்துளிவரை பொறுத்திருப்பதுண்டு.

வேதத்திலே நாம் பார்ப்போமென்றால், சாறிபாத் விதவையின் வாழ்விலும் கடைசி வேளையில் இதே மாதிரியான ஒரு அற்புதம் நிகழ்ந்தது. கடும் பஞ்ச வேளையில் அவளிடமிருந்த எல்லா பொருட்களும் தீர்ந்துவிட்டது. கடைசியாக பானையை வழித்தெடுத்தால் ஒரு படி மாவும் ஒரு கரண்டி எண்ணெயும் தேறும். அதில் அடை செய்து சாப்பிட்டுவிட்டு உயிரை விட எண்ணினாள். அந்த கடைசி கட்டத்தில் ஆண்டவர் எலியாவை அவளிடத்தில் அனுப்புகிறார். சில வேளைகளில் நம்முடைய வாழ்வில் நமது தேவை உச்சக்கட்டத்தை அடையும்போதுதான் தேவன் நமது வாழ்க்கையில் குறுக்கிடுகிறார். காரணம் என்ன?

நமது சொந்த முயற்சிகளினால் பல இடங்களுக்கு உதவி நாடி சென்று பலரை சந்தித்து, பல கதவுகளைத் தட்டி எங்கும் உதவிக்கான வாசல் அடைபடும்போது இறுதியில் ஆண்டவரிடத்தில் வந்து 'ஆண்டவரே நீரே என் தஞ்சம், வேறு கதி இல்லை' என்று நாம் சொல்லும் நிலைக்கு வரும்வரை தேவன் நமது வாழ்வில் குறுக்கிடமாட்டார். நாம் அவரிடம் சரணடைந்து அவர் பாதத்திற்கு வரும்வரை அவர் அமர்ந்திருப்பார்.

பிரியமானவர்களே! நானும் சாறிபாத் விதவையை போலத்தான் காணப்படுகிறேன் என்று கூறுகிறீர்களா? தேவன் இந்த இக்கட்டான சூழ்நிலையில் உங்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் நாம் ஒரு காரியத்தை கவனிக்க வேண்டும். அந்த விதவை பற்றாக்குறையின் மத்தியிலும் தேவனுடைய மனிதனுக்கு முதலில் கொடுத்தாள். பல சமயங்களில் நமது வாழ்க்கையிலும் எவ்வளவு சம்பாதித்தாலும் பொத்தலான பையிலே போடுகிறோம். இந்த நிலை மாற வேண்டுமானால் முதலாவது ஆண்டவருக்காக கொடுக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

இனித் தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. பவுல் அவர்கள் நடுவிலே நின்று... உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது என்றான் (அப். 27:20-22).

வாழ்வின் கடைசி மணித்துளியில் வந்து நிற்கிறேன் என்று சொல்கிறீர்களா? மனிதர்களை நம்பி ஏமாந்து போனீர்களோ? கண்ணீரே உங்களுக்கு உணவாயிற்றோ? பிரச்சனைகளுக்கு முடிவு மரணம்தான் என எண்ணி சோர்ந்து போயுள்ளீர்களோ? தேவனின் பாதத்தில் சரணடையுங்கள். நூறு சதவிகிதம் அவரே கதி என்று அவர் பாதத்தில் விழுந்து விடுங்கள். விசுவாசத்தோடு அவருடைய வேளைக்காக காத்திருங்கள். ஏற்றவேளையில் கட்டாயம் கர்த்தர் அற்புதம் செய்வார். ஆமென்! அல்லேலூயா!


**அன்புடன் போதகர்**

# விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாம்

கிறிஸ்து இயேசுவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

விசுவாசம் என்றவுடனே விசுவாசத்தின் தந்தை ஆபிரகாம் நினைவுக்கு வருவார். அதற்கு காரணம் என்ன தெரியுமா? தன்னை விசுவாசத்தில் காத்துக்கொண்டதோடு தன் குடும்பத்தையும் விசுவாசத்தில் வழிநடத்தினார். பெற்றோர் வழி பிள்ளைகள் என்பர். ஆபிரகாமை பாருங்கள்!

“கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும் படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்; நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்” (ஆதி. 18:19).




கர்த்தர் ஆபிரகாமைக் குறித்து “தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்று கூறினார். அப்படிப்பட்டதான தகப்பனாக இருந்ததால், அவருடைய சந்ததி மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாக இந்நாளளவும் திகழ்கிறது.

நாமும் அவருடைய சந்ததியாக கிறிஸ்துவுக்குள் அழைக்கப்படுகிறோம். இந்நாட்களில் அத்தகைய தகப்பன்மார் இல்லாததினால் நாம் பயங்கரமான இளைய தலைமுறையை கண்டு வருகிறோம். இந்நாட்களில் வாலிபர்கள் போதை மருந்துகளுக்கும், திருமணத்திற்கு முன் பாலியல் உறவுகள், தீவிரவாத குழுக்களுடன் சேர்க்கை, குண்டர்களோடு சேர்க்கை இப்படி கெட்டு போவதற்கு தகப்பன்மார் தங்களுடைய பொறுப்பை சரியாக நிறைவேற்றாததே காரணம். நமது பிள்ளைகள் சபைக்கும், சமுதாயத்திற்கும் பிரயோஜனமுள்ளவர்களாக விளங்க வேண்டுமென்றால் நிச்சயமாக அதில் தகப்பனின் பங்கு அதிகம் என்பதை நாம் உணரவேண்டும்.

தேவன் குடும்பத்தின் தலையாக கணவரைத்தான் வைத்திருக்கிறார். மனைவியின் பங்கும் அதில் உண்டென்றாலும் குடும்ப தலைவன் என்ற முறையில் தகப்பன்மார் நிச்சயமாக அதிக பொறுப்புண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் உண்டென்றால் அந்த பிள்ளைகளின் எல்லா பொறுப்பும், அவர்களின் எதிர்காலமும், அவர்களின் படிப்பும், அவர்கள் திருமணம் செய்து போகும்வரைக்கும் அவர்களை குறித்த எல்லா காரியத்திலும் தகப்பனுக்கு பங்கு உண்டு, பொறுப்பு உண்டு. தகப்பன் இல்லாத தகப்பனை இழந்த குடும்பத்தை குறித்து இங்கு பேசவில்லை.

### கரிசனையுள்ள தகப்பன்:-

ஒரு கரிசனையுள்ள தகப்பன், தன் பிள்ளைகளின் படிப்பைக் குறித்தும், உணவை குறித்து மாத்திரம் கரிசனை கொள்ளாமல், அவர்களின் ஆவிக்குரிய ஜீவியம் எப்படி உள்ளது என்பதிலும் அக்கறை கொள்கிறான். பிள்ளைகள் தினமும் வேதாகமம் படிக்கிறார்களா? முழங்கால்படியிட்டு ஜெபிக்கிறார்களா? என்று அவன் காணவேண்டும். அப்படி செய்யாத பட்சத்தில் அவர்களுக்கு அவன் போதிக்கவேண்டும். எனக்கே நேரம் இல்லை, வேலைக்கு போயிட்டு வருவதே எனக்கு சரியாக இருக்கிறது, இதில் இதை எல்லாம் நான் எங்கு செய்வது என்று சாக்குபோக்கு சொல்வீர்களானால், நாளை கர்த்தரிடம் அவர் நமக்கு கொடுத்த பிள்ளைகளை எப்படி வளர்த்தோம் என்பதைக் குறித்து கணக்கு கொடுக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

ஒருவேளை வேலையினிமித்தம் வெளிநாட்டில் தகப்பன் இருந்தாலும், எனக்கு பொறுப்பில்லை என்று கைகழுவி விடமுடியாது. விடுமுறைக்கு வரும்போது மாத்திரமல்ல, ஒவ்வொரு முறை பிள்ளைகளோடு பேசும்போதும் அவர்களுக்கு கர்த்தரைக் குறித்த பயத்தோடிருக்க போதிக்கவேண்டும். அவர்களிடம் ஆலயத்திற்கு ஒழுங்காக போக சொல்லவேண்டும். கர்த்தருக்கடுத்த காரியங்களில் ஈடுபடும்படி சொல்லி போதிக்கவேண்டும். குடும்பமாக ஒரே சபைக்கு செல்லும்படி கற்றுக்கொடுக்கவேண்டும். தாய் ஒரு சபைக்கும், பிள்ளைகள் ஒரு சபைக்கும் நிச்சயமாக செல்லக்கூடாது. இன்று அநேக ஆவிக்குரிய குடும்பங்களின் பிள்ளைகள் உலக வழிகளில் சென்றுவிடுவதற்கு காரணம் சரியான பாதையை தங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்காததே! தங்கள் பிள்ளைகள் தவறு செய்யும்போது நிச்சயமாக கண்டிக்கவேண்டும்.

### கரிசனையற்ற தகப்பன்:-

ஏலீ ஒரு உத்தம ஆசாரியனாக இருந்தபோதும், ‘நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்’ (1சாமு. 2:29).

கர்த்தர் அவனிடம் அவனுடைய பிள்ளைகளை குறித்து வருத்தப்பட்டதையும், பின்னர் அந்த பிள்ளைகள் ஒரே நாளில் மரிக்க நேரிட்டதையும் காண்கிறோம்.

தீர்க்கதரிசி சாமுவேல் ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனாயிருந்தும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள் (1சாமு. 8:3) என்றும் பார்க்கிறோம்.

தாவீது ராஜாவின் பிள்ளைகள் எப்படி மோசமானவர்களாக இருந்தார்கள் என்றும் நாம் வேதத்தில் கண்கூடாக காண்கிறோம். இந்த தகப்பன்மார் தாங்கள் கர்த்தரோடு உண்மையாக இருந்தால் போதும் என்று சுயநலமாக நினைத்து தங்களுக்கு பின்வரும் சந்ததியினருக்கு கர்த்தரைக் குறித்து சொல்லி போதிக்காததால் அவர்கள் கெட்டுபோனார்கள்.

நாம் சம்பாதிப்பதும், கஷ்டப்படுவதும் எதற்காக? நம் பிள்ளைகள் நன்றாக இருக்கவேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காக மாத்திரமே. அவர்கள் உலகபிரகாரமாக நன்றாக இருந்தால் மட்டும் போதாது கர்த்தருக்குள் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களை நாம் பரலோகத்தில் பார்க்கமுடியும். என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை (3யோவான் 4-ம் வசனம்) என்று யோவான் சொல்வது போல அதைவிட மேலான சந்தோஷம் நமக்கு எதுவும் இல்லை.

ஆபிரகாமை குறித்து தேவனுக்கு ஒரு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்றுக் கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்று தைரியமாக கர்த்தர் கூறினார். அதன்படி ஆபிரகாம் கட்டளையிட்டு, ஈசாக்கும் யாக்கோபும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக வாழ்ந்ததோடு, கர்த்தர் தாம் ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று கூறிக் கொள்ளும்படியாக அவர்கள் வாழ்ந்தார்கள்.

நம் பிள்ளைகளையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தைப் போதித்து கர்த்தர் மகிழ்கின்ற குடும்பங்களாக, ஆபிரகாமின் சந்ததியாக நம் குடும்பங்களை காத்து கொள்வோமா? கர்த்தர்தாமே அப்படிப்பட்ட தகப்பன்மாராக ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென் அல்லேலூயா!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை துவங்கியவர்களில் ஒருவரும் முன்னாள் மூப்பருமான **திரு. D. ஜஸ்டின்** அவர்கள் ஏப்ரல் மாதம் 6-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் **திரு. மைக்கேல்** அவர்களின் தாயார் **திருமதி. J. நிர்மலா ஜோதிராஜ்** அவர்கள் ஏப்ரல் மாதம் 28-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தாயாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் **திரு. Y. ஜாண் யேசு லார்ட்ஸன்** அவர்கள் மே மாதம் 3-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பை பெற்றார்கள். அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் **திரு. கனகவேல்** அவர்களின் தகப்பனார் **திரு. கதிர்வேல்** அவர்கள் மே மாதம் 3-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் **செல்வி. ஷெர்லி** அவர்களின் தகப்பனார் **திரு. R. சுரேஷ்** மே மாதம் 5-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ யாக்கோபு அல்பேயு

## உண்ணாவிரதம்

விண்ணில் : 63
நாடு : கலிலேயா
தரிசன பூமி : எருசலேம்



இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் யாக்கோபு என்பவர்கள் இரண்டு பேர். ஒருவர் செபதேயுவின் மகன், மற்றொருவர் அல்பேயுவின் மகன். யாக்கோபு என்ற சொல்லுக்கு "பிறர் உடைமையை பறிப்பவன்" என்று பொருள்படும்.

அல்பேயுவின் குமாரன் யாக்கோபை 'சின்ன யாக்கோபு' என்று அழைப்பர். ஏனெனில் இவர் உயரத்தில் குள்ளமானவர். யூதா ததேயுவின் சகோதரராவார். இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு நெருங்கிய உறவினர். யூத மதநெறியில் மிகுந்த பற்று உடையவர். யூத சட்டங்களை மிக நுணுக்கமாகக் கடைபிடிப்பவர்.

இயேசு கிறிஸ்து இறந்தபின் அவரைப் பார்க்காமல் உணவு உண்ணமாட்டேன் என விரதம் இருந்ததாகவும், அவரை மீண்டும் உயிர்த்தெழுந்தபின் தனியே தரிசனம் கண்டபின்னரே உண்ணாவிரதத்தை முடித்ததாகவும் சொல்லப்படுகிறது. உயிர்த்தெழுந்த இயேசுவும் அவருடன் உணவு உண்டதாக கூறப்படுகிறது.

பெந்தேகொஸ்தே நிகழ்வுக்குப் பின் இவர் எருசலேமிலே ஆயராக நியமிக்கப்பட்டார். அதன் முதல் ஆயரும் இவரே. உவமைகளால் போதிப்பதில் சிறந்தவர். இவர் அடிக்கடி முழந்தாளிட்டு முகங்குப்புற விழுந்து ஜெபித்தமையால் இவரது முழங்கால்களும், நெற்றியும் மரத்துப்போயின என்று புனித எரேணிமஸ் கூறுகிறார். இவர் விசுவாசம், செயல், சோதனைகள், ஏழைகளை மதித்தல், நாவடக்கம், மெய் ஞானம், பணஆசை, சண்டைகள் போன்ற அன்றாட பிரச்சனைகளை பற்றி தெளிவாக போதித்தார்.

அப்போஸ்தலர்கள், கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி யூத விசுவாசிகளிடமும் நன்மதிப்பும் பெற்றவராக விளங்கினார். ஆனால் யூத குருவான அன்னா என்பவர் இவருக்கு எதிராக எழும்பி, ஒரு கூட்டத்தினரைக் கூட்டி வந்து அவரைப் பிடித்து ஆலயத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டு பின்பு கல்லால் எறியச்செய்து கொடூரமாகக் கொலை செய்தான். இவரின் மரணத்தைக் கண்ட மக்கள் இன்னும் அதிகமாக கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தார்கள்.

அன்பரே! எதிரான காரியங்கள் எது வந்தாலும் எழுந்து பிரகாசிக்க முடியுமல்லவா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். – யாக்கோபு

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! எனக்கு வரும் சோதனைகளை ஜெயித்து உமக்குள் பாக்கியவானாக வளர உதவிசெய்யும்.

**தியானத்திற்கு:-** உபா. 20, பிரசங்கி 12, அப். 11-12

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ மே 2021

| | | |
|---|---|---|
| 07-05-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Binita Pratheesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Arun Paul |
| 14-05-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Divya Darling Kasiraja |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Anantha Raj |
| 21-05-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Felsi Rani Jacob |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Anshio Shajin |
| 28-05-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Golden Irene Sheeja Robin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bejo Nelson |
| 04-06-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracilin Melba |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bensam |

# நிகழ்வும் பாடமும்



வந்ததும் மறந்தேன்
டிவி வந்ததும்
புத்தகங்களை மறந்தேன்.
கார் வந்ததும்
நடப்பதை மறந்தேன்.
போன் கிடைத்ததும்
கடிதத்தை மறந்தேன்.
கணினி வந்ததும்
எழுதுவதை மறந்தேன்.
ஏசி வந்ததும்
இயற்கைக் காற்றை மறந்தேன்.
நகரம் வந்தவுடன்
கிராம அழகை மறந்தேன்.
வங்கிக் கார்டுகள் வந்ததும்
பணத்தின் மதிப்பை மறந்தேன்.
வாசனைத் திரவியம் வந்ததும்
பூக்களின் மணத்தை மறந்தேன்.
துரித உணவு வந்ததும்
சமையலை மறந்தேன்.
சம்பாத்தியத்தை தேடி ஓடிஓடி
என்னையே மறந்தேன்
நிம்மதி இழந்தேன்.

# விசுவாசத்தின் வெளிப்பாடு

"அப்பொழுது அவர்; நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். பிசாசு உன் மகளை விட்டு நீங்கிபோயிற்று என்றார்" (மாற்கு 7:29).



சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க பெண் ஒருத்தியின் விசுவாச வெளிப்பாடு பற்றி இப்பகுதி விளக்குகிறது. இயேசு தமக்கு ஓய்வு வேண்டுமென்று விரும்பி, தீரு, சீதோன் அருகிலுள்ள ஒரு வீட்டிற்கு சென்றார். இங்கு அசுத்த ஆவியினால் தமது மகள் வேதனைப்படும் நிலையை அதன் தாய் அவரிடம் விபரமாக கூறுகின்றார். இனம், ஜாதி, மொழி இவைகளைக் காட்டிலும் மனிதன் முக்கியமானவன் என்று ஆண்டவர் விரும்புகிறபடியால் இப்பெண்ணின் தாயாருக்கு இந்த நம்பிக்கையான வார்த்தையை ஆறுதலாக கூறுகின்றார்.

## 1. விசுவாசத்தை அங்கீகரிக்கும் ஆண்டவர்:-

குணமாக்கப்பட்ட பெண் கிரேக்க கலாச்சாரத்தை பின்னணியாக கொண்டவளாக காணப்பட்டவர். எனவே இவள் யூதரல்லாத புற இனத்துப் பெண்ணாகக் காணப்பட்டாள். இதே பகுதி மத்தேயு 15:23-34 வரையில் இடம்பெற்றுள்ளது. அதில் ஆண்டவர், அவருக்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. எனவே ஆண்டவர் நாம் கேட்கின்ற அனைத்திற்கும் பதில் சொல்லுகிறவர் அல்ல. சில நேரத்தில் அவர் நமது விசுவாசத்தைச் சோதித்துப் பார்க்கின்றார்.

ஆண்டவர் அந்த பெண்ணின் தாயிடம் என் பிதாவினால் யூத மக்கள் விடுதலை வாழ்வு பெற என்னை அவர் அனுப்பினார் என்றபோது, 28-வது வசனத்தில் "அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்". அப்பொழுது அவளது தாழ்மையான விசுவாசத்தை அங்கீகரித்து அவளது வேண்டுதலை நிறைவேற்றுகின்றார். கடவுள்முன் தாழ்மைப்படுபவர் எவரும் ஏற்கப்படுவர் என்பதை இந்நிகழ்வு சுட்டிக்காட்டுகிறது.

## 2. விசுவாசத்தில் பலன் தரச் செய்யும் ஆண்டவர்:-

கடவுள் ஒருபோதும் தம்மை யூதர்களை மட்டும் மீட்க வந்த மேசியாவாக வெளிப்படுத்தவில்லை. ஆதியாகமம் 12:3-ல் ஆபிரகாமுடன் கடவுள் பேசின வார்த்தை பூமியிலுள்ள சகல வம்சங்களும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்பதாகும். எனவே ஆபிரகாமின் வழித் தோன்றலாக காணப்பட்டவர் அனைத்து மக்களுக்கும் ஒளியாக இருந்து பலன் கொடுக்கின்றார். லூக்கா 2:30-32 புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றார் சிமியோன். எனவே ஆண்டவர் மூலமாக அனைத்து மக்களும் விசுவாசத்தின் பயனை அடையச் செய்கின்றார். எபேசி. 2:17,18 அல்லாமலும் அவர் வந்து தூரமாயிருந்து உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும் சமாதானத்தை சுவிசேஷமாக அறிவித்தார்.

அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியராலே பிதாவினிடத்தில் சேரும் பெரும்பேற்றினை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம்.

## 3. விசுவாசத்தை பாராட்டும் ஆண்டவர்:-

பாராட்டுதல் அனைவராலும் விரும்பி ஏற்கப்படுகின்ற ஒன்றாகும். ஆண்டவரின் சீடர்கள் இயேசுவிடம் கொண்ட விசுவாசத்தைக் காட்டிலும் இந்தப் பெண்ணின் விசுவாசம் பெரிதாகக் காணப்பட்டது. ஏனெனில் அவள் ஆண்டவரை ஜீவ அப்பமாக கண்டுக்கொண்டாள். மத்தேயு 15:28-ல் இயேசு அவளுக்கு பிரதியுத்தரமாக ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். அவளது விசுவாசத்தில் ஆண்டவர் அவள் வீட்டிற்கு போகாமல் வெகுதூரமாக இருந்த இடத்திலிருந்து குணப்படுத்துகின்றார். யூதர்கள் ஆண்டவரை வெறுத்துத் தள்ளினர். ஆனால் இந்த புறஜாதி பெண்களோ உண்மையான விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றனர். எபிரெயர் 1:6-ல் “விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்” என்கிறது திருமறை. நாமும் நமது விசுவாசத்தை சரியாக உறுதிசெய்து கொள்ள முயலுவோமாக.

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## மே 2021 மாத கேள்விகள்

### (எபேசியர், பிலிப்பியர் முழுவதும்)

1. ஆவியின் பட்டயம் எது?
2. நம்முடைய குடியிருப்பு எங்கிருக்கிறது?
3. இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர் யார்?
4. அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு ஆதாயம் என்று எதைக் கூறுகிறார்?
5. யாருக்கு இடங்கொடாமல் இருக்கவேண்டும்?
6. கர்த்தரின் மகிமைக்கு புகழ்ச்சியாக மீட்கப்படுபவர்கள் யார்?
7. கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்து யாருடைய சாயலானார்?
8. பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணர் யார்?
9. எல்லா மனுஷருக்கும் தெரிந்திருக்கவேண்டிய குணம் எது என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார்?
10. ஒருவருக்கொருவர் எவ்வாறு கீழ்ப்படியவேண்டும்?
11. அப்போஸ்தலனாகிய பவுலின் குறைச்சலுக்கு உதவிசெய்தவன் யார்?
12. எது வாயிலிருந்து புறப்படவேண்டாம்?
13. யாராலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு?
14. பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக எப்படித் தொடரவேண்டும்?
15. சூரியன் அஸ்தமிக்கும் முன்பாக எது தணியவேண்டும்?
16. யாருடைய சிந்தை நம்மில் இருக்கவேண்டும்?
17. இயேசு கிறிஸ்து எப்படி இருதிறத்தாரையும் ஒப்புரவாக்கினார்?
18. சகல நற்குணத்திலும், நீதியிலும் உண்மையிலும் விளங்குவது எது?
19. பவுல் அப்போஸ்தலனின் கோத்திரம் எது?
20. அழைக்கப்பட்ட அழைப்புக்கு எப்படி நடந்துகொள்ளவேண்டும்?

### ஏப்ரல் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. விசுவாசம், அன்பு – 1தெச. 5:8
2. நன்மை செய்வதில் - 2தெச. 3:13
3. இயேசு – கொலோ. 4:11

4. தேவ வசனம் - கொலோ. 1:25
5. மக்கெதோனியா, அகாயா – 1தெச. 1:8
6. தேவ சமாதானம் - கொலோ. 3:15
7. சரீர பாண்டத்தைப் - 1தெச. 4:5
8. அநியாயஞ்செய்கிறவன் - கொலோ. 3:25
9. பாவமன்னிப்பாகிய மீட்பு – கொலோ. 1:14
10. தீர்க்கதரிசனங்களை – 1தெச. 5:20
11. ஞானம், அறிவு – கொலோ. 2:3
12. புறம்பேயிருக்கிறவர்களுக்கு – கொலோ. 4:5
13. சாப்பிடவும் கூடாது – 2தெச. 3:10
14. தீமோத்தேயு – 1தெச. 3:2
15. சுவிசேஷம் - கொலோ. 1:23
16. இரவிலே திருடன் வருகிறவிதமாய் - 1தெச. 5:2
17. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் - கொலோ. 3:6
18. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் - 1தெச. 4:16
19. வைத்தியன் - கொலோ. 4:14
20. தேவனுடைய – 1தெச. 4:3

## ஏப்ரல் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Nisha Rajan |
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Baskar | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Felsi Rani John | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shiney Johan |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Thamari Johnson |
| Mrs. Juslin Jaslin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Manju Martin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Mary Praveena Gobinath | |

## மே 2021 மாத கேள்விகள்

### (ஏசாயா 21-30 முடிய)

1. கூளம் எங்கு மிதிக்கப்படும்?
2. கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டு போகிறவன் யார்?
3. எழுபது வருஷம் மறக்கப்பட்டிருக்கும் பட்டணம் எது?
4. ருசியுள்ள கப்பிகளை திண்பவை எவை?
5. கேட்க மனதானால் திரும்பிவந்து கேளுங்கள் என்று கூறியவன் யார்?
6. கர்த்தர் எவற்றை நூலும், தூக்கு நுலூமாக வைப்பேன் என்கிறார்?
7. இல்க்கியாவின் குமாரன் யார்?
8. படுகுழியிலிருந்து ஏறுகிறவன் எதில் அகப்படுவான்?
9. அசீரியா, எகிப்து தேசத்தார் எங்கு கர்த்தரைப் பணிந்துகொள்வார்கள்?
10. அரமனை விசாரிப்புக்காரனும், பொக்கிஷக்காரனும் யார்?
11. நித்திய கன்மலையாய் இருப்பவர் யார்?
12. கர்த்தருடைய நாவு எப்படி இருக்கும்?
13. மேகத்தின் நிழலினால் எது தணிகிறது?
14. தப்பி ஓடுகிறவர்களுக்கு அப்பங்கொடுக்க எதிர்கொண்டு போனவர்கள் யார்?
15. யாருடைய பெருமையான கிரீடம் காலால் மிதித்துப்போடப்படும்?
16. பூமியின் கடையாந்தரங்களிலிருந்து கேட்கும் கீதம் எது?
17. தோப்பேத் எதினால் கெந்தகத் தீயைப்போல கொளுத்தப்படும்?
18. கர்த்தரின் ஆளுகையில் கலங்கி, நாணமடைவது எது?
19. முத்தரிக்கப்பட்ட புஸ்தகத்தின் வசனங்களைப் போலிருப்பது எது?
20. வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது எது?

## ஏப்ரல் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. சிங்காசனம் - ஏசாயா 16:5
2. அசீரியர் - ஏசாயா 19:25
3. கட்டுவிரியன் - ஏசாயா 14:29
4. சீயோன் மலை – ஏசாயா 18:7
5. பூமி – ஏசாயா 11:9
6. எஸ்போன் - ஏசாயா 16:8
7. ஓரிகள் - ஏசாயா 13:22
8. சோவான் - ஏசாயா 19:11,13
9. சைகை காட்டுகள் - ஏசாயா 13:2
10. தர்த்தான் - ஏசாயா 20:1
11. தமஸ்கு – ஏசாயா 17:1
12. விடிவெள்ளி – ஏசாயா 14:12
13. கர்த்தராகிய யேகோவா – ஏசாயா 12:2
14. பனிமேகம் - ஏசாயா 18:4
15. தீமை செய்கிறவர்களுடைய சந்ததி – ஏசாயா 14:20
16. இஸ்ரவேல் - ஏசாயா 19:24
17. பாபிலோன் - ஏசாயா 13:19
18. தாவீதின் கூடாரத்திலே சிங்காசனத்தில் - ஏசாயா 16:5
19. நீதி, சத்தியம் - ஏசாயா 11:5
20. மோவாப் - ஏசாயா 15:1

## ஏப்ரல் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Justus Martin |
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Lenin Raj |
| Mr. Daniel Raj P. | Mr. Prince J. P. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Rajan V. N. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Ramesh R. |
| Mr. Jino John | Mr. Robin Devadhas |
| Mr. Johan Pratheep | Mr. Sujith Gladson |

# May God Bless All

## Birthday Celebrants – May 2021

| | |
|---|---|
| 02nd May | Mr. Atheesh |
| 03rd May | Master. Jaydon Immanuel, S/o Mr. Ramesh |
| 03rd May | Master. Rishan Robin Garwin, S/o Mr. C.D. Robin Raj |
| 03rd May | Mr. C. J. Bravin |
| 05th May | Mr. Jegan Broose |
| 05th May | Mr. H. Jayaraj |
| 07th May | Miss. Eunice Drusilla, D/o Mr. Robin Devadhas |
| 09th May | Mr. Bejo Nelson |
| 09th May | Master. Jesien Manoj, S/o Mr. Justus Martin |
| 09th May | Miss. G.M. Johnsey Gobisha, D/o Mr. Gobinath |
| 10th May | Mrs. Gracilin Melba, W/o Mr. Sujin |
| 10th May | Mrs. Rabboni Robin, W/o Mr. C.D. Robinraj |
| 11th May | Mrs. Sumathi, W/o Mr. Jones |
| 11th May | Miss. D. Joyce Davina, D/o Mr. Dhinakaran |
| 11th May | Mr. N. Selvakumar |
| 12th May | Mr. Moorthy |
| 12th May | Mrs. Virgin Jegatha, W/o Mr. Jino John |
| 13th May | Mr. Gnanadhas |
| 17th May | Mr. David Sunder Singh |
| 17th May | Mr. C. Stalin |
| 18th May | Master. Dani J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 18th May | Mr. Johnson Raj |
| 18th May | Mrs. Susamma |
| 20th May | Mrs. Kala, W/o Mr. Jegan Broose |
| 20th May | Mrs. Synthia, W/o Mr. Srinivas |

| | |
|---|---|
| 20th May | Mr. Jaslin Sundarakumar |
| 21st May | Mr. C. Immanuel Prince |
| 21st May | Master. S. Dino, S/o Mr.C. Sujin |
| 22nd May | Mrs. Sangeeth Johns, W/o Mr. Augustin |
| 25th May | Mrs. Jeya Rani, W/o Mr. Victor |
| 27th May | Mr. G. Jabastin |
| 27th May | Master. Rishon, S/o Mr. Ramji |
| 28th May | Mr. Gobinath |
| 29th May | Mr. Sujith Gladson |
| 31st May | Mr. I. Simson |

## Wedding day Anniversaries – May 2021

| | |
|---|---|
| 01st May | Mr. Ramji & Mrs. Sterbie |
| 01st May | Mr. Victor Johnslin & Mrs. Jancy Deepa |
| 04th May | Mr. Ashok & Mrs. Angel |
| 05th May | Mr. Selvakumar & Mrs. Wiselin Shalisa |
| 05th May | Mr. S. Kannan & Mrs. Vency Deepa |
| 05th May | Mr. T.N. Brejin & Mrs. Rupa |
| 06th May | Mr. Jean C.R. Shibin & Mrs. Percy |
| 07th May | Mr. Alex Baskar & Mrs. Boopathi |
| 07th May | Mr. Winson & Mrs. Hema |
| 07th May | Mr. Benny Moses & Mrs. Jeevlin Esther |
| 10th May | Mr. Kanagavel & Mrs. Priyadarsini |
| 10th May | Mr. Bensam & Mrs. Gracelin Rani |
| 12th May | Mr. Victor Thaya Singh & Mrs. Jeya Rani |
| 16th May | Mr. Selvamani & Mrs. Vimala |
| 16th May | Mr. Vinolin Vetha Kumar & Mrs. Regin Justa |
| 25th May | Mr. Kingsly & Mrs. Mary Suja |
| 25th May | Mr. Jegan Broose & Mrs. Kala |
| 25th May | Mr. Rex Macedo & Mrs. Geetha a |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
    - ஓய்வுநாள் பள்ளி
    - பெண்கள் ஐக்கிய சங்கம்
    - ஆண்கள் ஐக்கிய சங்கம்
    - பாடகர் குழு
    - ஜெபக் குழு

    அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் க்ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. **புதிதாக தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மத சார்பின்மையோடு சிறப்பாக ஆட்சிபுரிய ஜெபிப்போம்.**

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா மற்றும் உருமாறிய கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
7. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
8. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்!** **இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – மே 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மே 1 | சனி | ஏசா. 65:17-25 | ஏசா. 65:23 | 1நாளா. 21-23 |
| மே 2 | ஞாயிறு | யோவா. 11:17-28 | யோவா. 11:25 | 1நாளா. 24-26 |
| மே 3 | திங்கள் | நீதி. 22:17-29 | நீதி. 22:29 | 1நாளா. 27-29 |
| மே 4 | செவ்வாய் | நீதி. 24:21-34 | நீதி. 24:27 | 2நாளா. 1-4 |
| மே 5 | புதன் | மாற். 13:31-37 | மாற். 13:34 | 2நாளா. 5-7 |
| மே 6 | வியாழன் | உபா. 14-22-29 | உபா.14:29 © | 2நாளா. 8-11 |
| **மே 7** | **வெள்ளி** | **2தெச 3:6-15** | **2தெச. 3:10** | **2நாளா. 12-16** |
| மே 8 | சனி | ஆதி. 26:16-29 | ஆதி. 26:19 | 2நாளா. 17-19 |
| மே 9 | ஞாயிறு | யோவா. 20:19-23 | யோவா. 20:21 | 2நாளா. 20-22 |
| மே 10 | திங்கள் | 1தீமோ. 5:16-25 | 1தீமோ. 5:18 | 2நாளா. 23-25 |
| மே 11 | செவ்வாய் | 1தெச. 4:1-12 | 1தெச. 4:12 | 2நாளா. 26-29 |
| மே 12 | புதன் | யோவா. 10:7-18 | யோவா. 10:11 | 2நாளா. 30-32 |
| மே 13 | வியாழன் | லூக். 7:1-10 | லூக். 7:7 | 2நாளா. 33-34 |
| **மே 14** | **வெள்ளி** | **ஆதி. 2:8-15** | **ஆதி. 2:15** | **2நாளா. 35-36** |
| மே 15 | சனி | லூக். 16:9-13 | லூக். 16:13 | எஸ்றா 1-4 |
| மே 16 | ஞாயிறு | லூக். 24:44-49 | லூக். 24:49 | எஸ்றா 5-7 |
| மே 17 | திங்கள் | மத். 24:45-51 | மத். 24:45 | எஸ்றா 8-10 |
| மே 18 | செவ்வாய் | மத். 21:28-32 | மத். 21:31 | நெகே. 1-4 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மே 19 | புதன் | மத். 20:1-18 | மத். 20:15 | நெகே. 5-7 |
| மே 20 | வியாழன் | மத். 25:14-25 | மத். 25:15 | நெகே. 8-10 |
| **மே 21** | **வெள்ளி** | **மத். 13:18-23** | **மத். 13:23** | **நெகே. 11-13** |
| மே 22 | சனி | ரூத் 2:1-12 | ரூத் 2:12 | எஸ்தர் 1-4 |
| மே 23 | ஞாயிறு | யோவா. 16:1-11 | யோவா. 16:8 | எஸ்தர் 5-10 |
| மே 24 | திங்கள் | சங். 128:1-6 | சங். 128:2 | யோபு 1-4 |
| மே 25 | செவ்வாய் | மத். 9:35-38 | மத். 9:35-38 | யோபு 5-8 |
| மே 26 | புதன் | யாத். 2:16-22 | யாத். 2:20 | யோபு 9-12 |
| மே 27 | வியாழன் | நீதி. 31:10-31 | நீதி. 31:13 | யோபு 13-17 |
| **மே 28** | **வெள்ளி** | **எபே. 4:25-32** | **எபே. 4:20** | **யோபு 18-21** |
| மே 29 | சனி | லூக். 16:19-31 | லூக். 16:23 | யோபு 22-26 |
| மே 30 | ஞாயிறு | 2கொரி. 13:11-14 | 2கொரி. 13:14 | யோபு 27-30 |
| மே 31 | திங்கள் | லூக். 12:13-21 | லூக். 12:15 | யோபு 31-34 |
| ஜுன் 1 | செவ்வாய் | ஆதி. 1:1-12 | ஆதி. 1:1 | யோபு 35-38 |
| ஜுன் 2 | புதன் | ஆதி. 2:8-15 | ஆதி. 2:15 | யோபு 39-42 |
| ஜுன் 3 | வியாழன் | லேவி. 25:17-24 | லேவி. 25:19 | சங்கீதம் 1-7 |
| **ஜுன் 4** | **வெள்ளி** | **மத். 5:3-10** | **மத். 5:5** | **சங்கீதம் 8-14** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**